## 89. துதிக்கு பாத்திரரை கூப்பிடுவேன்

### பல்லவி

துதிக்கு பாத்திரரை கூப்பிடுவேன்
அதினால் என் சத்துருவுக்கு விடுவிக்கபடுவேன்

### அனுபல்லவி

துதிக்க துதிக்க சத்துருகோட்டை உடையுதே
துதிக்க துதிக்க தடைகள் எல்லாம் நீங்குதே

### சரணங்கள்

1. இந்த நாள் தேவன் தந்த நாள்
இதிலே மகிழ்ந்து களிகூறுவேன்
ஸ்தோத்திர பலியிட்டு தேவனுக்கு
என் பொருத்தனைகளை செலுத்துவேன்
- துதிக்க

2. இந்த தேவன் என்றைக்குமுள்ள
சதாகாலமும் நம்மோடு இருப்பார்
அநாதி தேவன் நம் அடைக்கலம்
அவர் புயங்கள் என்றும் ஆதாரம்
- துதிக்க

3. ஈட்டிகளை முறிப்பவர் நம்தேவன்
இரதங்களை அக்கினியில் சுட்டெரிப்பாரே
தேற்கத்தின் வெள்ளங்களை திருப்பும் தேவன்
நம் சிறையிருப்பை அனைத்தும் திருப்புவாரே
- துதிக்க